விரைவு நீதிமன்றம் (நடுவர் நிலை),
கோவில்பட்டி
முன்னிலை: **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், கோவில்பட்டி(மு.கூ.பொ).

2026 வது வருடம், ஜீன் மாதம், 18–ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண். 64/2018
CNR. No. TNTT12-000066-2018

வ.எண்;		**புகார்தாரர் விபரங்கள்**
1.	புகார்தாரரின் பெயர்	S. ரவிச்சந்திரன்
2	புகார்தாரரின் தந்தை பெயர்	சுப்பா நாயக்கர்
3	புகார்தாரரின் வேலை	–
4	புகார்தாரரின் முகவரி	52/24, வடக்கு தெரு, சிவஞானபுரம், விளாத்திகுளம்
5	புகார்தாரரின் வயது	45/2018
		எதிரியின் விபரங்கள்
6	எதிரியின் பெயர்	S. சந்தனராஜ்
7	எதிரியின் தந்தை பெயர்	சுப்பையா
8	எதிரியின் வேலை	–
9	எதிரியின் முகவரி	4/784, முதல் பிள்ளையார் கோவில் அருகில், N.G.O.காலனி, K.T.C. நகர், எட்டையாபுரம்
10	எதிரியின் வயது	46/2018
		தேதி
11	சம்பவம்	28.12.2017
12	புகார்	16.02.2018
13	எதிரியின் கைது	எதிரி கைது செய்யப்படவில்லை.
14	பிணை விபரம்	எதிரி பிணை பெறவில்லை.
15	வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி	05.03.2024

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:12 +0530

16	வழக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதி	17.06.2026
17	உத்தரவு	எதிரி மீது மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரியை குவி.மு.ச 255(2)ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து ஆறு மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், நஷ்டஈடு தொகையாக ரூ.4,00,000/-ற்கு காசோலை திருப்பப்பட்ட நாள் முதல் நஷ்ட ஈடு தொகை கொடுக்கும் வரை ஆண்டு வட்டி 9% கணக்கிட்டு எதிரி, புகார்தாரருக்கு கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
18	தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம்	1.மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. 2. எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
19	காலதாமதத்திற்கான விளக்கம்	எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்ததாலும், சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதாலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு கடந்த 16.02.2018 அன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கோவில்பட்டியில் தாக்கல் செய்யப்பட்டு C.C.112/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு கடந்த 20.06.2018 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன் 17.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K. பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K. பாபு அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:19 +0530

தீர்ப்புரை

1. இவ்வழக்கானது புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரி மீது விசாரணை நடத்தக் கோரி குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டப்பிரிவு 200 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்புகார் ஆகும்.

புகார்மனுவின் சுருக்கம்:

2. புகார்தாரரும், எதிரியும் தெரிந்தவர்கள் என்ற அடிப்படையில், கடந்த 25.06.2017 அன்று எதிரி ரூ.4,00,000/–த்தை புகார்தாரரிடமிருந்து கடனாக பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே மேற்படி கடன் தொகைக்கு புகார்தாரர் பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்து எதிரி, புகார்தாரரிடம் கொடுத்துள்ளார். மேலும் எதிரி, மேற்படி தொகைக்கு வருடத்திற்கு 12% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். புகார்தாரர் கடந்த 10.02.2017 அன்று மேற்படி தொகையினை திருப்பி செலுத்துமாறு எதிரியிடம் கேட்டதற்கிணங்க மேற்படி கடன் தொகையான ரூ.4,00,000/– ஐ திரும்ப செலுத்தும் முகமாக எதிரி கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளையின் காசோலை எண்.925700 கொண்ட காசோலையினை 13.12.2017 என தேதியிட்டு எதிரி, புகார்தாரர் பெயருக்கு வரைந்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளார்.

3. அதன்பிறகு மேற்படி காசோலையினை கடந்த 21.12.2017 அன்று புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி, படந்தபுளி கிளையில் காசோலையை பணமாக்கும் பொருட்டு தாக்கல் செய்தபோது, எதிரியின் காசோலை "Funds Insufficient" என்ற வங்கி குறிப்புடன் திருப்பப்பட்ட விவரம் 29.12.2017 அன்று புகார்தாரருக்கு தெரியவந்துள்ளது.

4. அதன்பின் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக 05.01.2018 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு "Unclaimed" என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. மேலும எதிரி, இதுவரை பதிலோ, பணமோ தரவில்லை. எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தும், எதிரி வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து மோசடி செய்து ஏமாற்றி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்தை செய்துள்ளார். எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு இழப்பீடும் வழங்க வேண்டுமென்று புகார்தாரர் தரப்பில் 16.02.2018 அன்று குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:26 +0530

5. மேற்படி புகாரானது பரிசீலிக்கப்பட்டு போதிய முகாந்திரம் இருந்ததால் முதலில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கோவில்பட்டியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு 20.06.2018 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். குவிமுச பிரிவு 251ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றச்சாட்டு குறித்து 05.03.2024 அன்று கேள்வி கேட்கப்பட்டபோது எதிரி இது பொய் வழக்கு என்று மறுத்துள்ளார்.

6. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் தரப்பில் பு.சா.2 விசாரிக்கப்பட்டு ச.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சி முடித்துக்கொள்ளப்பட்டது.

<u>புகார்தாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>

7. பு.சா.1 ரவிச்சந்திரன் தனது முதல் விசாரணையில் புகார் மனுவை ஒத்து முதல்விசாரணையை ஆணையுறுதி பத்திரமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.1–ன் மூலமாக 1. 25.06.2017 தேதியிட்ட ரூ.4,00,000/–ற்கான கடனுறுதி சீட்டு அசல் (**பு.சா.ஆ. 1**), 2. 28.12.2017 தேதியிட்ட கனரா வங்கி, படந்தபுளி கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல் (**பு.சா.ஆ.2**), 3. 05.01.2018 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் (**பு.சா.ஆ.3**), 4. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை அசல் (**பு.சா.ஆ.4**), 5. ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளையின் 13.12.2017 தேதியிட்ட ரூ.4,00,000/–ற்கான காசோலை எண்.925700 கொண்ட காசோலை நகல் (**பு.சா.ஆ.5**) ஆகியவை சான்றாவணங்களாக குறியிடப்பட்டுள்ளது. மேலும், பு.சா.2 மணிகண்டன், கிளை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளை மூலமாக 1. 12.12.2017 முதல் 01.01.2018 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று **(ச.சா.ஆ.1)** சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் அசல் காசோலை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு புகார்தாரிடமிருந்து தொலைந்து விட்டதால் இந்நீதிமன்றத்தில் Crl.M.P.No.2377/2024–ல்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.18 17:38:33 +0530

கடந்த 21.11.2024 அன்று பிறப்பித்த உத்தரவின் படி மேற்படி காசோலையின் நகல் சான்றாவணமாக குறியிடப்பட்டுள்ளது.

8. இத்துடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டது.

9. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமானவற்றை 13.02.2025 மற்றும் 11.06.2026 ஆகிய தேதிகளில் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி சாட்சியத்தை பொய் என்று மறுத்து தனது தரப்பில் சாட்சியம் உண்டு என்று கூறினார்.

10. எதிரி தரப்பில், எ.சா.1 அன்னலட்சுமி மாயன், கிளை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளை மூலமாக, 1. 01.12.2017 முதல் 31.12.2017 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று **(எ.சா.ஆ.1)** சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எ.சா.2 பொன்ராஜ் செல்லையா, கிளை மேலாளர், கனரா வங்கி, படந்தபுளி கிளை மூலமாக 1. 01.12.2017 முதல் 31.12.2017 வரையுள்ள புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று **(எ.சா.ஆ.2),** சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிரி தரப்பில் எ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார். மேலும் எ.சா.3–ன் சாட்சியமானது தவறுதலாக எ.சா.2 என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டது.

12. குற்றமுறையீட்டாளர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மாற்றுமுறையாவணங்கள் சட்டப் பிரிவு 138ன் படியான எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க குற்றமுறையீட்டார் தன்னை பு.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளதாகவும், புகார்தாரர் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு கீழான தேவைகளை கடைபிடித்துள்ளதாகவும், பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக குற்றமுறையீட்டாளர்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:40 +0530

தனது வழக்கினை நிரூபித்துள்ளதாகவும், எதிரி காசோலையை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், காசோலை ராகவன் என்பவருக்கு கொடுத்தாக உள்ள எதிரியின் எதிர்வாதத்தை நிரூபிப்பதற்கு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரிக்கு மட்டுமே தெரிந்த சங்கதி குறித்து மற்றொருவர் சாட்சியமளிப்பதை ஏற்க முடியாது என்றும், காசோலை எவ்வாறு புகார்தாரருக்கு கிடைத்தது என்பதற்கு தகுதியான எதிர்வாதம் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை என்றும், நகல் காசோலையை தகுதியான ஆவணமாக ஏற்று இந்நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், எதிரி தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை எனவும், புகார்தாரர் தனது வழக்கினை சட்டப்படி நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு உரிய இழப்பீடும் வழங்கி தீர்ப்பளிக்குமாறும் புகார்மனுவை ஒத்திசைந்து வாதிட்டுள்ளார்.

13. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இது பொய் வழக்கு என்றும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரி, புகார்தாரரிடமிருந்து புகாரில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவித கடனும் பெறவில்லை என்றும், எதிரிக்கு முறையாக சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றும், எதிரிக்கு, புகார்தாரரை யார் என்றே தெரியாது என்றும், பு.சா.ஆ.1, 5 ஆகிய ஆவணம் ராகவன் என்பவருக்கு வழங்கப்பட்டது என்றும், கடனுறுதி சீட்டு மற்றும் காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்றும், அசல் காசோலை இவ்வழக்கில் குறியிடப்படாமல் IEA பிரிவுகள் 65 மற்றும் 63–ஐ கடைபிடிக்காமல் நகல் காசோலையை இரண்டாம் தர ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், புகார்தாரருக்கு கடன் கொடுப்பதற்கு போதுமான வருமான வசதி கிடையாது என்றும், புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு உரிமம் கிடையாது என்றும், புகார்தாரர் விவசாயம் செய்வதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், காசோலை காணாமல் போனது சம்மந்தமாக புகார்தாரர் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும், புகார்தாரரின் வழக்கு முரண்பாடாக இருப்பதாகவும், எனவே எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார். எதிரி தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Tedhi Singh Vs. Narayan dass mahant [(2022) 119 ACrC 958], H.Siddiqui (dead) by Lrs. Vs. A.Ramalingam [AIR 2011 SC 1492] மற்றும் John K.Abraham Vs. Simon C.Abraham and another [(2013) 12 S.C.R. 753] ஆகிய தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டுள்ளது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:45 +0530

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், புகார்தாரர் தரப்பு வழக்கானது எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை தகு நிலை ஐயப்பட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

14. புகார்தாரர் பெயருக்கு வரையப்பட்ட 13.12.2017 தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளையின் ரூ.4,00,000/ற்கான காசோலை எண்.925700 கொண்ட (பு.சா.ஆ.5) காசோலை நகலை, புகார்தாரர் கனரா வங்கி, படந்தபுளி கிளையில் 27.12.2017 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தபோது பு.சா.ஆ.5 காசோலை "Funds Insufficient" என்ற காரணம் குறிப்பிட்டு 28.12.2017 அன்று (பு.சா.ஆ.2) குறிப்பாணை மூலம் திருப்பப்பட்டது. புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு 05.01.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.3)ஐ அனுப்பியுள்ளார். மேற்படி பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பானது அஞ்சலக உறை (பு.சா.ஆ.4) மூலம் திருப்பட்டுள்ளது.

15. புகார்தாரர் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் 16.02.2018 அன்று தாக்கல் செய்துள்ளார். எனவே புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழான சட்டப்பூர்வமான நிபந்தனைகளை கடைபிடித்துள்ளார்.

16. சட்டப்பூர்வமான கடனுக்காகத்தான் காசோலை வரையப்பட்டது என்று மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவுகள் 118 (a) மற்றும் 139 ன் கீழ் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது. மேற்படி அனுமானத்தை எதிரியால் மறுதளிக்க முடியும். பு.சா.ஆ.5 காசோலை எதிரியினுடையது இல்லை என்று எதிரி தரப்பில் மறுக்கவில்லை. இந்த வழக்கு பு.சா.ஆ.5 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பும் எதிரி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி காசோலை எதிரியின் கையொப்பம் வேறுபாடாக இருப்பதாக திருப்பப்படாமல், எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளதால் மேற்படி காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்ற எதிரியின் மேற்படி எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. மேலும் மேற்படி சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் எதிரி வசிக்கவில்லை என்று திருப்பப்படாமல், எதிரிக்கு கடந்த 06.01.2018 அன்றும், 08.01.2018 அன்றும் அறிவிப்பு கொடுக்கப்பட்டும், எதிரி மேற்படி சட்ட அறிவிப்பை உரிமை கோராமல் பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் மேற்படி சட்ட அறிவிப்பு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:38:52 +0530

திருப்பப்பட்டுள்ளதால், எதிரிக்கு முறையாக சட்ட அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்ற எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்றால், காசோலையிலுள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளதாக காசோலை திருப்பப்பட்டிருக்கும். மேலும் சட்ட அறிவிப்பில் உள்ள முகவரி எதிரியினுடையது இல்லை என்றும், எதிரி சட்ட அறிவிப்பிலுள்ள முகவரியில் வசிக்கவில்லை என்றும், சட்ட அறிவிப்பு திருப்பப்படவில்லை. புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் மாற்றுமுறையாவணச்சட்டப்பிரிவு 139 கீழான அனுமானம் முதல்நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது.

17. மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் M/s. laxmi Dyechem (Vs) State of Gujarat & Ors. (2013 CRI.L.J. 3288) என்ற வழக்கில்,

" Therefore if the accused is able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can Fail. The accused can rely on the materials submitted by the complainant in order to raise such defence and it is inconceivable that in some cases the accused may not need to adduce the evidence of his/her own. If however, the accused/drawer of a cheque in question neither raises a probable defence nor able to contest existence of a legally enforceable debt or liability, obviously statutory presumption under Section 139 of the NI Act regarding commission of the offence comes into play if the same is not rebutted with regard to the materials submitted by the complainant" என்று தீர்ப்பளித்துள்ளது.

18. புகார்தாரர் சார்பாக முதல் நோக்கில் அனுமானிக்கப்படும்போது, பு.சா.ஆ.5 காசோலை சட்டப்பூர்வமான கடனுக்காக வழங்கப்படவில்லை என்று நிரூபிக்கும் சுமை எதிரி மேல் உள்ளது. குவிமுச பிரிவு 313 (1) (b)ன் கீழ் இந்நீதிமன்றம் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பொய் சாட்சி என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டதை மட்டும் வைத்து சட்டப்பூர்வமான அனுமானத்தை எதிரி மறுதளித்ததாக கருதமுடியாது. ஏனென்றால் எதிரி உறுதியான எதிர்வாதத்தை நிரூபிப்பதன் மூலமே சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுதளிக்கமுடியும்.

19. குவிமுச பிரிவு 313 (1) (b) ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பு.சா.ஆ.5 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரியினுடையது இல்லை என்றும், பு.சா.ஆ.5 காசோலை எதிரியினுடைய வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்படவில்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:00 +0530

என்றும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. புகார்தாரர் தன்னை புசா.1 ஆக விசாரித்து பு.சா.ஆ.2 குறிப்பாணை மூலம் பு.சா.ஆ.5 காசோலை எதிரி வங்கி கணக்கில் "போதிய பணமில்லை" என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது என்பதை புகார்தாரர் நிரூபித்துள்ளார். புகார்தாரர் சட்டப்பூர்வமான அறிவிப்பு (பு.சா.ஆ.3)ஐ எதிரிக்கு குறித்த காலக்கெடுவுக்குள் அனுப்பியுள்ளார் என்பதை திருப்பப்பட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.4) மூலம் நிரூபித்துள்ளார்.

20. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Indian Bank Association Case reported in 2014 (5) SCC 590 – என்ற வழக்கில் "We make it clear that if Provisos (a), (b) and (c) to section 138 of the Act are shown to have been complied with, technically the commission of the offence stands completed and it is for the accused to show that no offence could have been committed by him for specific reasons and defences" என்று தீர்ப்பளித்துள்ளது.

21. புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் முதல் நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்பட்டு எதிரி தான் குற்றம் நடக்கவில்லை என்று அனுமானத்தை மறுதளிக்கவேண்டும். புகார்தாரர் தனது புகார் மனுவை ஒத்து முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். பு.சா.ஆ.5 காசோலையில் உள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளதாக திருப்பப்படாமல், எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளதால் எதிரி மீது பொறுப்பு நிலை ஏற்படுகிறது. மேலும் அதனால் எற்படும் அனுமானத்தை மறுத்தளிக்க வேண்டிய பொறுப்பு எதிரி மேல் உள்ளது.

22. இந்த வழக்கில் அசல் காசோலை புகார்தாரர் வசம் இருந்து தொலைந்து விட்டதால் நகல் காசோலை இரண்டாம் தர ஆவணமாக இந்நீதிமன்ற உத்தரவின்படி குறியிடப்பட்டுள்ளது தகுதியானதாக கருதப்படுகிறது. புகார்தாரர் ரூ.4,00,000/–ஐ வங்கி மூலமாக அல்லாமல் எதிரிக்கு தொகையாக நேரடியாக கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. புகார்தாரர் மேற்படி ரூ.4,00,000/–ற்கான வருமான மூல ஆதாரம் தொடர்பான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையேயான பண பரிவர்த்தனை தொடர்பாக கடனுறுதி சீட்டை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் தான் 60 ஏக்கரில் விவசாயம் செய்து வருவதாக சாட்சியமளித்துள்ள நிலையில், அது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர் தனது

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:09 +0530

குறுக்கு விசாரணையில் தான் விவசாயம் செய்து வருவதாக சாட்சியமளித்துள்ளதன் மூலம் மேற்படி கடன் தொகையை கொடுக்கும் அளவிற்கு பணம் வசதி உள்ளதற்கு வாய்ப்புண்டு. எதிரி மேற்படி சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசிக்கவில்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்ட அறிவிப்பில் எதிரி அந்த முகவரியில் வசிக்கவில்லை என்று திருப்பப்பப்படவில்லை. எதிரிக்கு இருமுறை தகவல் கொடுக்கப்பட்டதாகவும், எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் உரிமை கோராமல் வந்ததால் மேற்படி சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதாக சட்ட அறிவிப்பின் அஞ்சலக உறையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் எதிரியின் எதிர்வாதத்தை ஏற்க முடியாது.

23. மேற்படி கடன் தொகைக்கான மூல ஆதாரம் தொடர்பான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி காசோலை தொகை எந்த வங்கியில் இருந்தும் எடுக்கப்படவில்லை என்றும் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தான் விவசாய பொருட்களை போட்டு கையில் காசோலைக்கான தொகையை வைத்திருந்ததாக சாட்சியமளித்துள்ளதன் மூலம், மேற்படி கடன் தொகைக்கான மூல ஆதாரம் விவசாய பொருட்கள் மூலம் வந்தது வெளிப்படுகிறது. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் வருமான வரி செலுத்தும் அளவிற்கு தனக்கு வருமானம் கிடையாது என்பதால், தான் வருமான வரி செலுத்தவில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளார். புகார்தாரர் வருமான வரி செலுத்தவில்லை என்பதை வைத்து மட்டும் அவருக்கு கடன் கொடுப்பதற்கான மூல ஆதாரம் இல்லை என்று தீர்மானிக்க முடியாது. பொதுவாக விவசாய வருமானத்திற்கு வருமான வரி செலுத்துவது கிடையாது.

24. புகார்தாரரும், எதிரியும் தெரிந்தவர்கள் என்று எதிரியின் எதிர்வாதம் உள்ள நிலையில், எதிரியின் தொலைபேசி எண் தனக்கு தெரியாது என்று தனது குறுக்கு விசாரணையில் புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ளது முரண்பாடாக உள்ளது. மேலும் எதிரி லாரி வைத்து தொழில் செய்வதாகவும், ஆனால் எவ்வளவு வருமானம் எதிரி பெறுவார் என்று தனக்கு தெரியாது என்றும் புகார்தாரர் குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி காசோலையிலுள்ள கையொப்பமும் மற்ற விவரங்களும் வெவ்வேறு வடிவங்களில் உள்ளது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், காசோலையை எதிரி தான் எழுதிக் கொண்டு வந்ததாக புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில்

Digitally signed by K ANAND Date: 2026.06.18 17:39:18 +0530

K ANAND

சாட்சியமளித்துள்ளது ஏற்புடையதாக உள்ளது. மேலும் பு.சா.ஆ.1, 5 ஐ புகார்தாரர் தான் தயார் செய்ததாக எதிரி தரப்பில் கூறியுள்ள நிலையில், அதை நிரூபிக்க தகுதியான எந்த நடுநிலையான சாட்சியங்களும், நம்பும்படியான வேறு எந்த சாட்சியமும், ஆவணங்களும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. புகார்தாரரின் நண்பரான ராகவன் என்பவருக்கு பு.சா.ஆ.1 மற்றும் பு.சா.ஆ.5 ஐ எதிரி வழங்கியதாகவும், பு.சா.ஆ.1 மற்றும் பு.சா.ஆ.5 ஐ புகார்தாரருக்கு வழங்கவில்லை என்றும் எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், அதை நிரூபிக்க நம்பத்தகுந்த தகுதியான வேறு எந்த சாட்சியமும், ஆவணமும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

25. மேற்படி காசோலையிலுள்ள கையொப்பம் எதிரினுடையது இல்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ளது உண்மையாக இருந்திருந்தால், மேற்படி காசோலையிலுள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளதாக காசோலை திருப்பப்பட்டிருக்கும். காசோலையிலுள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளதாக திருப்பப்படாத நிலையில், மேற்படி கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று எடுத்துள்ள எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. பு.சா.2 தனது முதல் விசாரணையில் எதிரியின் வங்கி கணக்கு அறிக்கை குறித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் பு.சா.2 தனது குறுக்கு விசாரணையில் காசோலை உள்ள கையொப்பமும், ஏற்கனவே வங்கியில் கொடுக்கப்பட்ட மாதிரி கையொப்பமும் ஒன்றாக இருந்தால் மட்டுமே காசோலை பரிசீலனை செய்யப்படும் என்று சாட்சியமளித்துள்ள நிலையில், காசோலையில் கையொப்பம் வேறுபாடாக இருப்பதாக திருப்பப்படாத நிலையில், காசோலையில் உள்ள கையொப்பம் எதிரினுடைய கையொப்பம் என்பது வெளிப்படுகிறது. பு.சா.ஆ.1 கடனுறுதி சீட்டினை கவனமாக ஆராயும் போது புகார்தாரர் ரூ.4,00,000/−ற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு சதவீத வட்டிக்கு எதிரிக்கு கடன் கொடுத்துள்ளது வெளிப்படுகிறது. ஆனால் மேற்படி கடனுறுதி சீட்டு புகார்தாரரால் மோசடியாக தயார் செய்யப்பட்டதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. அசல் காசோலை வைத்து புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு அசல் காசோலை தொலைந்து போய் விட்டதால் நகல் காசோலை குறியிடப்பட்டதை வைத்து மட்டும் புகார்தாரரின் வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக் கொள்ளவில்லை என்பதால் திருப்பப்பட்டுள்ளதால் சட்ட அறிவிப்பு முறையாக எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதாகவே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் காசோலையில் உள்ள கையொப்பம் வேறுபாடாக உள்ளதாக காசோலை திருப்பப்படவில்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:25 +0530

என்பதால் காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது என்பது தெளிவாகிறது.

26. புகார்தாரரின் சட்ட அறிவிப்பிற்கும், புகார் மனுவிற்கும், முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திற்கும் முரண்பாடுகள் காணப்படவில்லை என்பதால் புகார்தாரர் தரப்பு வழக்கு மீது நம்பிக்கை ஏற்படுகிறது. புகார்தாரர் வட்டிக்கு கடன் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளதன் மூலம், வட்டி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கிடை காசோலை தொகையை கடனாக புகார்தாரர், எதிரிக்கு கொடுத்துள்ளது வெளிப்படுகிறது. ச.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.1 எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையையும், எ.சா.ஆ.2 புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையையும் கவனமாக ஆராயும் போது அதில் பெரிய தொகைகளுக்கான பண பரிவர்த்தனைகள் நடக்கவில்லை என்பது வெளிப்படுகிறது. எ.சா.1 தனது முதல் விசாரணையில் எதிரியின் வங்க கணக்கு அறிக்கை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் பொதுவாக ஒரு நபர் பணம் அனுப்பும்போது அவரின் பெயர் பணம் பெறும் வங்கி கணக்கில் துலங்காதென்று சாட்சியமளித்துள்ளார். புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கை குறித்து எ.சா.2 சாட்சியமளித்துள்ளார். எ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் புகார்தாரர் ஒன்றுக்கு மேல் வங்கி கணக்குகள் வைத்திருக்க வாய்ப்புண்டு என்று சாட்சியமளித்துள்ளார்.

27. எ.சா.3 தனது முதல் விசாரணையில் தான், எதிரி, ராகவன் ஆகியோர்கள் நண்பர்கள் என்றும், எதிரி லாரி வைத்திருந்ததாகவும், எதிரி கடந்த 2017 ஆம் ஆண்டு ரூ.1,50,000/-ஐ ராகவனிடம் கடனாக வாங்கும் போது தான் உடனிருந்ததாகவும், அப்போது எதிரி ராகவனுக்கு வழக்கிடை காசோலையை கொடுத்ததாகவும், அந்த கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டதாகவும், தற்போது அந்த காசோலையை வைத்து இந்த வழக்கு மோசடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரி மேற்படி ராகவனிடம் கடன் பெற்றதாக சொல்லப்படும் தேதியை சரியாக குறிப்பிட்டு எ.சா.3 சொல்லவில்லை என்பதால் எ.சா.3-ன் சாட்சியம் செல்லாது என்று புகார்தாரர் தரப்பு வாதம் உள்ளது. மேற்படி வழக்கிடை காசோலை கந்தசாமிபுரம் கிளையிலிருந்து வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலை இன்னாசிபுரம் கிளையை சார்ந்தது என்று எ.சா.3 சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. மேலும் எதிரி அழைத்ததால் தான் இந்த வழக்கில் சாட்சியமளிக்க வந்ததாக எ.சா.3 தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எ.சா.3 தனது

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:32 +0530

சாட்சியத்தில் எதிரி தனது நண்பர் என்று சாட்சியமளித்துள்ளதால், எ.சா.3 ஒருதலைப் பட்ச சாட்சியாக இருக்க வாய்ப்பு உண்டு என்பதால் அவரின் சாட்சியத்தை கவனமாக பரிசீலிக்க வேண்டியுள்ளது. எதிரி மேற்படி ராகவன் என்பவருக்கு காசோலை கொடுத்ததாகவும், அந்த கடன் தொகையை திருப்பி செலுத்தி விட்டதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில், அது தொடர்பாக எந்த ஆவணமும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி ராகவன் என்ன காரணத்திற்காக மேற்படி காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து வழக்கு தாக்கல் செய்ததாக எதிரி தரப்பில் முறையாக விளக்கப்படவில்லை. மேலும் எந்த ஒரு சாதாரண நபரும் காசோலை தொகையை திருப்பிச் செலுத்தும் போது காசோலையை திரும்பப் பெறாமல் இருந்திருக்க மாட்டார். எதிரி மேற்படி ராகவனிடம் பெற்றதாக சொல்லப்படும் கடன் தொகையை திருப்பி செலுத்தி விட்டு காசோலையை திரும்பப் பெறவில்லை என்ற எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. எதிரி மேற்படி ராகவனுக்கு கடன் தொகையை திருப்பி செலுத்தியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

28. எதிரி எந்த தேதியில் புகார்தாரரிடம் கடன் தொகை கேட்டார் என்றும், மேற்படி கடன் தொகையை புகார்தாரர் எவ்வாறு தயார் செய்தார் என்றும், எந்த இடத்தில் வைத்து எதிரிக்கு புகார்தாரர் கடன் கொடுத்தார் என்றும் புகார்தாரர் தனது முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்பதை வைத்து மட்டும் புகார்தாரர் தரப்பு வழக்கினை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் எதிரி லாரி வைத்து தொழில் செய்வதாக சாட்சியமளித்துள்ளதை எ.சா.3 தனது குறுக்கு விசாரணை ஒப்புக்கொண்டுள்ளதன் மூலம் புகார்தாரரும், எதிரியும் தெரிந்தவர்கள் என்பதும், புகார்தாரரும், எதிரியும் தெரிந்தவர்கள் இல்லை என்ற எதிரியின் எதிர்வாதமும் ஏற்புடையதாக இல்லை என்பதும் தெளிவாகிறது. புகார்தாரர் வழக்கில் உள்ள சிறிய முரண்பாடுகளை வைத்து புகார்தாரர் தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை கவனமாக ஆராயும் போது மேற்படி வழக்கிடை காசோலையை மேற்படி ராகவன் என்பவருக்கு கொடுத்ததாக உள்ள எதிரியின் எதிர்வாதம் நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

29. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் பெரிய அளவில் முரண்பாடுகளின்றி சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியின் எதிர்வாதங்கள் நம்பும்படியாக இல்லை என்பதாலும், புகார்தாரரும், எதிரியும்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:38 +0530

தெரிந்தவர்கள் என்பது புகார்தாரரின் குறுக்கு விசாரணையில் வெளிப்படுவதாலும், எதிரியின் எதிர்வாதங்களை நிரூபிக்க எதிரி தரப்பில் போதுமான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், எதிரியின் எதிர் வாதங்கள் முரண்பாடாக உள்ளதாலும், புகார்தாரர் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

30. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிரான மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு, எதிரியை மாற்றுமுறையாவணச்சட்டப் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

31. இவ்வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், எதிரியின் குற்ற செய்கைகளினால் புகார்தாரர் பாதிக்கப்பட்டு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், இவ்வழக்கில் எதிரிக்கு குற்றவாளிகளுக்கான நன்னடத்தைச் சட்டத்தின் பயனை வழங்குவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>**இறுதியாக**</u>

32. இறுதியாக எதிரி மீது மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கு ஆறு மாதங்கள் (6) கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும், இவ்வழக்கில் வழக்கு காசோலைக்கான தொகை ரூ.4,00,000/- என்பதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கு 2018 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு 7 வருடத்திற்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், 7 வருடங்களாக மேற்படி புகார்தாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை கருத்திற்கொண்டும், எதிரி கு.வி.மு.ச. பிரிவு 357(3)ன் படி காசோலைக்கான தொகை ரூ.4,00,000/-(ரூபாய் நான்கு இலட்சம்) ஐ 9% ஆண்டு வட்டியுடன் சேர்த்து காசோலை திருப்பப்பட்ட நாளான 28.12.2017 முதல் காசோலைக்கான தொகையை திருப்பி கொடுக்கும் வரையிலான தேதி வரை கணக்கிட்டு மொத்த இழப்பீடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் எதிரிக்கு கூடுதலாக மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் குவிமுச பிரிவு 255 (2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138-ன் கீழான தண்டனையை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:39:44 +0530

அனுபவித்த பிறகு, மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறினால் விதிக்கப்படும் மேற்படி தண்டனையை எதிரி ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். இந்த வழக்கில் இழப்பீட்டு தொகை உத்தரவிடப்பட்டுள்ளதால் எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பிறகு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 வருடம் ஜீன் மாதம், 18–ம் தேதி வியாழக்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.18 17:39:51 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
கோவில்பட்டி(மு.கூ.பொ).

இணைப்பு:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	ரவிச்சந்திரன்	புகார்தாரர் – பு.சா.1
2.	மணிகண்டன்	கிளை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளை – பு.சா.2

புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
பு.சா.ஆ.1	25.06.2017 தேதியிட்ட ரூ.4,00,000/–ற்கான கடனுறுதி சீட்டு அசல்	பு.சா.1 – 26.06.2024
பு.சா.ஆ.2	28.12.2017 தேதியிட்ட கனரா வங்கி, படந்தபுளி கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல்	பு.சா.1 – 26.06.2024

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.18 17:39:58 +0530

பு.சா.ஆ.3	05.01.2018 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல்	பு.சா.1 – 26.06.2024
பு.சா.ஆ.4	எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை அசல்	பு.சா.1 – 26.06.2024
பு.சா.ஆ.5	ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளையின் ரூ.4,00,000/–ற்கான 13.12.2017 தேதியிட்ட காசோலை எண்.925700 கொண்ட காசோலை நகல்	பு.சா.1 – 25.11.2024

<u>சாட்சிகள் தரப்பு சான்றாவணம்:</u>

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர் /சான்றளித்தவர்
ச.சா.ஆ.1	12.12.2017 முதல் 01.01.2018 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று	பு.சா.2– 12.02.2025

<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>:

எதிரி தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	அன்னலட்சுமி மாயன்	கிளை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, கந்தசாமிபுரம் கிளை – எ.சா.1
2.	பொன்ராஜ் செல்லையா	கிளை மேலாளர், கனரா வங்கி, படந்தபுளி கிளை –எ.சா.2
3.	பகத்சிங்	எதிரியின் நண்பர் –எ.சா.3

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:40:06 +0530

<u>எதிரி தரப்பு சான்றாவணம்:</u>

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
எ.சா.ஆ.1.	01.12.2017 முதல் 31.12.2017 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று	எ.சா.1 – 06.03.2026
எ.சா.ஆ.2.	01.12.2017 முதல் 31.12.2017 வரையுள்ள புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று	எ.சா.2 – 06.03.2026

குறிப்பு:

1. தீர்ப்பு பகரப்பட்ட அன்று எதிரி ஆஜர்.
2. தீர்ப்புரையின் நகல் எதிரிக்கு கட்டணமின்றி வழங்கப்பட்டது.
3. புகார்தாரருக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை எதிரி செலுத்தவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.18 17:40:12 +0530

நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை)
கோவில்பட்டி(மு.கூ.பொ).